சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

HMOP. No. 19/2020

பெயர் திரு. கோதண்டராமன் **நாள்.** .25.02.2025
த/பெ. நாகப்பன்

**மனுதாரர் சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்று சுமார் 15 வருடங்கள் ஆகிறது. திருமணம் ஆன பின்பு நானும், எதிர்மனுதாரரும் மங்களம் கிராமத்தில் குடும்பம் செய்தோம். அந்த வீடு குடிசை வீடாகும். நானும், எதிர்மனுதாரரும் சுமார் 8 வருடங்கள் ஒன்றாக குடும்பம் செய்தோம். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என் பெயரில் விவசாய நிலங்கள் ஏதும் இல்லை. எனக்கு வருமானம் எவ்வாறு என்றால் கூலி வேலை செய்து வருமானம் ஈட்டுவேன். நான் தற்பொழுது இருக்கும் வீடு கல் வீடாகும். திருமணத்தின்போது எதிர்மனுதாரருக்கு 7 பவுன் போட்டார்கள். அதனை அவர் மீண்டும் பெற்றுக் கொண்டார். இருசக்கர வாகனம் பொருட்கள் கொடுத்து அதனை மீண்டும் பெற்றுக் கொண்டார். திருமணத்தின்போது எதிர்மனுதாரர் வேலைக்கு ஏதும் செல்லவில்லை. என் வீட்டில் இருந்து எதிர்மனுதாரர் வீடு சுமார் 300 மீட்டார் தொலைவில் உள்ளது. எனக்கு இரண்டு மகன்கள். எதிர்மனுதாரரும், நானும் பிரிந்து எத்தனை வருடங்கள் ஆகின்றன என்றால் 1.3.2020 முதல் பிரிந்து வாழ்ந்து வருகிறோம்.

மறுவிசாரணை – இல்லை.